## ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை – 2017

---

ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல்கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1)ஆம் பிரிவு மற்றும் 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை அதிகாரச்சட்டத்தின் iv ஆம் பகுதியினது 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை சபையின் தலைவருக்கு 2018 ஆகஸ்ட் 23 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக்க கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தினைத் தவிர, ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 க்கமைய மதிப்பீட்டு மீளாய்வாகச் சீராக்கல் செய்யப்பட வேண்டிய சபையின் வாகனங்களும் குளிரூட்டிகளினதும் தேய்மான நிதியேற்பாடு 20 சதவீதம் முதல் 12.5 சதவீதம் வரை குறைக்கப்பட்டமை முன்னைய காலப்பகுதிக்குரியதாகச் சீராக்கல் செய்யப்பட்டதன் காரணமாக நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 14,811,960 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வினது கணிப்பீட்டின்படி மீளாய்வாண்டிற்கான குளிரூட்டிகளினதும் வயர் பொருத்தப்படாத இணையத்தள இணைப்புக்களுக்கு (WIFI) முறையே ரூபா 6,068 மற்றும் ரூபா 1,359 என குறைவாக தேய்மான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) வங்கி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் (Bank Confirmation) 79821576 ஆம் இலக்க நிலையான வைப்புக் கணக்கு மீதி ரூபா 1,925,194 ஆகியபோதும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,891,425 ஆக அது காட்டப்பட்டமையால் ரூபா 33,769 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிச் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் சபையின் செயற்பாட்டு வருமானம் ரூபா 36,033,468 ஆகியபோதும், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அறிக்கையின் பிரகாரமும் பெறுமதி சேர் வரி அறிக்கையின் பிரகாரமும் அவ்வருமானம் முறையே ரூபா 37,288,835 மற்றும் ரூபா 37,657,571 எனக் காட்டப்பட்டிருந்தன. வருமான வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2017 மார்ச் 31 இல் முடிவுற்ற காலாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட பெறுமதி சேர் வரி அறிக்கையின் பிரகாரம் அத்தினத்தில் உள்ளவாறு பெற வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 58,343 ஆகியபோதும், 2017 யூன் 30 இல் முடிவுற்ற காலாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட வரி அறிக்கையினது ஆரம்ப மீதியாக அதனை ரூபா 39,796 ஆக ரூபா 18,547 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2017 சனவரி 01 இல் ஊழியர்களது பணிக்கொடைக்கான நிதியேற்பாடு பேரேட்டின் பிரகாரம் ரூபா 2,767,825 ஆகியபோதும், ஊழியர்களது பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டுப் பட்டோலையின் பிரகாரம் அம்மீதி ரூபா 3,142,831 ஆகியமையால் ரூபா 375,006 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையினது VIII ஆம் அத்தியாயத்தின் 9.2 ஆம் பிரிவு | சபையின் 06 ஊழியர்கள் 2017 ஆம் ஆண்டினபோது வார இறுதி விடுமுறை நாட்களில் கடமை புரிந்ததற்காக அத்தினங்களுக்கு அதற்கு ஈடாக லீவைப் பெற்றிருந்ததுடன், மேலதிக நேர வேலைக் கொடுப்பனவையும் பெற்றிருந்தனர். இவ்வாறாகப் பெற்ற மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுத் தொகை ரூபா 23,939 ஆகும். |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14.2 ஆம் பிரிவு | மனிதவள முகாமைத்துவம் சம்பந்தமான அலுவலகக் கைநூல் ஒன்று பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்துடன் 2013 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டபோதும், அதற்குத் திறைச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக சபையின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 1,686,862 மிகை ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,407,870 ஆகும். இதனால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 2,721,018 குறைவு அவதானிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் உடன்படிக்கைக்குள்ளான சேவைகளது செலவினம் ரூபா 5,814,377 அதிகரித்தமையே மிகையில் குறைவு ஏற்படக் காரணமாயிருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 59,633 ஆகவிருந்த மிகை வேறுபாடுகளுடன் 2017 ஆம் ஆண்டினபோது ரூபா 1,686,862 ஆகியிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்யும்போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 4,929,845 ஆகவிருந்த பங்களிப்பு 2014 ஆம் ஆண்டில் ரூபா 11,179,018 வரை அதிகரித்து 2015 ஆம் ஆண்டினபோது ரூபா 10,034,264 வரை குறைவடைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டில் அது ரூபா 29,593,390 வரை அதிகரித்திருந்தபோதும், மீளாய்வாண்டில் ரூபா 27,189,141 வரைகுறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை அதிகாரச்சட்டத்தின் 3(அ) இல் குறிப்பிடப்படும் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சபையானது இனங்காணப்பட்ட 09 துறைகளில் தராதர அங்கீகாரத்தை மேற்கொண்டிருந்தது. அது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 கணிப்பு நிறுவனங்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டபோதும் அவற்றுள் 7 மாத்திரமே அங்கீகரிக்கப்பட்டிருந்தன. பிரத்தியேக சான்றுறுதிப்படுத்தும் நிறுவனங்கள், பசுமையான வாயு சான்றுறுதிப்படுத்தல் நிறுவனங்கள், சிறந்த ஆய்வுகூடப் பயன்பாடு தொடர்பான அங்கீகாரம் ஆகிய 3 துறைகளிலும் 4 நிறுவனங்களுக்கு மாத்திரமே அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) ஐந்து துறைகளில் தராதர அங்கீகாரத்தைப் பெற்றிருந்த 142 நிறுவனங்களில் 30 நிறுவனங்கள் அவற்றிலிருந்து விலகியிருந்தன. இதற்கமைய, நிறுவனத்திடமிருந்து தராதர அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் அதிலிருந்து விலகும் போக்கு தென்பட்டதுடன், தராதரச் சான்றிதழை பெறுவது தொடர்பாக நிறுவனங்களில் ஈடுபாட்டை ஏற்படுத்துவதற்கான விதிமுறைகள் அமுலாக்கப்படுதலில் கவனம் செலுத்தப்படாதுமிருந்தது

### 4.2 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 செப்டெம்பர் 01 தொடக்கம் மேலதிக பணிப்பாளர் பதவி வெற்றிடமாக இருந்து வருவதுடன், அதற்காக ஆட்சேர்ப்பிற்கு 2012 தொடக்கம் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டபோதும், 2018 யூலை 31 ஆந் திகதியளவிலும் குறித்த ஆட்சேர்ப்பு நடைபெறவில்லை. எவ்வாறாயினும், 2014 ஒக்டோபர் 14 ஆந் திகதிய டீஎம்எஸ்/1601 இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களக் கடிதத்தின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டும் ஒப்பந்தத்தை நீடிக்கும் அடிப்படையில் அப்பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தபோதும், அதன் பொருட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2016 யூலை 16 ஆந் திகதி வெற்றிடம் ஏற்பட்ட 01 கனிஷ்ட முகாமையாளர் (செயலாளர்) பதவி, 2015 யூலை 30 ஆந் திகதி வெற்றிடம் ஏற்பட்ட 01 தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தகவல் தொழில்நுட்பம்) பதவி, 2015 ஆகஸ்ட் 24 ஆந் திகதி வெற்றிடம் ஏற்பட்ட 01 சாரதிக்கான பதவி என்பவற்றிற்கு 2018 மே 31 வரை ஆட்சேர்ப்பு நடைபெறவில்லை.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தியை அடைதல்

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கை அடைவதற்குத் தயாராகும்போது நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்தாமையால் இலக்கிடப்பட்ட நோக்கத்தை அடைவதற்கான திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் முன்கூட்டியே தயாராகுதல் போன்றன மிகவும் மந்தகெதியிலும் நலிவான நிலையிலும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) செயலாற்றல் | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பணிகளை அதிகளவில் நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை |
| (ஆ) மனிதவள முகாமைத்துவம் | வெற்றிடங்கள் நிலவும் பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு குறிப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை. |